மிளகனூருக்குத் தார்ச்சாலை அமைத்தல்

***144 வினா.—திரு. த. சேனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், மிளகனூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் கம்பகேரனேந்தல் என்ற ஊரிலிருந்து மிளகனூர் என்ற ஊருக்குத் தார்ச் சாலை போடும் வேலையை அரசு 18—5—1973 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை எண் 1014-ல் அனுமதித்துள்ளது.

(இ) அதன் மதிப்பீடு இரண்டரை லட்சம் ரூபாய் ஆகும்.

திரு. த. சேனையா : மானாமதுரை ஒன்றியத்திலுள்ள மிளகனூருக்கு தார்ச் சாலை இல்லாததால் பஸ் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தார்ச் சாலைகள் அமைக்கும் தமிழக அரசுக்கு நன்றி கூறுகிறேன். அதை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வருகிற ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதும் இத்திட்டம் செயலாற்றப்படும். இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைகள் எல்லாம் கருங்கல் போடப்பட்டு அதன் மேல் தார் போடப்பட்டு எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற சாலைகளாக அமைக்கப்பட இருக்கிற காரணத்தால் உடனடியாகச் செய்வதற்கு இயலாது என்றாலும் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

Allotment of baby food

* 145 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Druggists Association has represented to the Government to give a liberal supply of baby food during September 1973; and

(*b*) if so, the action taken thereon?